**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் நாள் திங்கட்கிழமை

இடைக்கால மனு எண். 10/2025
இன்
அசல் வழக்கு எண். **53/2020**

1.பெனடிக்டா
2.ஜோஅருண்ராஜன் .....மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**/ எதிர் /**

R.பிரிட்டோ இருதயராஜ் ..... எதிர்மனுதாரர்/வாதி
(மேற்படியாரின் பவர் ஏஜெண்ட்
நிர்மலாவளன் அரசி என்பவர் மூலம்)

இம்மனு என்முன்பு 09.01.2026 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** இம்மனுவில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சிபிசி ஆர்டர் 26, ரூல் 9ன் படி ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் இந்த வழக்கில் உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் இல்லை என்பதால் அதனை நீக்கறவு செய்தும், புதிதாக மூத்த வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்தோ அல்லது சமூகம் நீதிமன்றம் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நீக்கறவு செய்வது சரியானதல்ல என்று கருதும்பட்சத்தில் அதே நீதிமன்ற ஆணையருக்கு கட்டளையை Re-Issue செய்து அவரை தற்பொழுது பூமியில் உள்ள உபயதரப்பு கட்டிடங்களின் அமைப்பினையும் சரியான முறையில் வருவாய்துறை மற்றும் கிரைய ஆவணங்களின் படி அளந்து அதுகுறித்து அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்திட உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா வழக்கில் ஏற்கனவே வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு IA.No.3/20 என்ற எண்ணில் உத்தரவிடப்பட்டு நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்துள்ளர் என்றும், அதற்கு தனது தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதியின் வீடு வருவாய்துறை ஆவணங்களின் படி சரியான அடிஅளவுகளில் உள்ளது என்பதை நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், வாதியின் கிரைய பத்திரத்தின் படி மட்டுமே தாவா சொத்தை அளவீடு செய்து ஆக்கிரமிப்பு உள்ளதாக நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் கூறியுள்ளார் என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கட்டியுள்ள கட்டிடத்தின் அடி அளவுகளை அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், இதனால் ஆக்கிரமிப்பு இருக்கிறதா, இல்லையா என்பதை நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மூலம் தெரிந்து கொள்ள இயலாத நிலை உள்ளது என்றும், தாவா சொத்து எது என்பதை குறிப்பிட்டு கூறவில்லை என்றும், இதனால் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் குழப்பமானதாக உள்ளதோடு வழக்கில் தீர்வு காண்பதற்கு உதவுவதாக இல்லை என்றும், எனவே ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தினை நீக்கறவு செய்து புதிதாக மூத்த வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்தோ அல்லது சமூகம் நீதிமன்றம் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நீக்கறவு செய்வது சரியானதல்ல என்று கருதும்பட்சத்தில் அதே நீதிமன்ற ஆணையருக்கு கட்டளையை Re-Issue செய்து அவரை தற்பொழுது பூமியில் உள்ள உபயதரப்பு கட்டிடங்களின் அமைப்பினையும், அளவுகளையும் வருவாய்துறை மற்றும் கிரைய ஆவணங்களின் படி சரியான முறையில் அளவீடு செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மறுப்புரையின் சுருக்கம்:**

மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளதை மனுதாரர்களே நிரூபிக்க

கடமைபட்டவர்கள் என்றும், நீதிமன்ற ஆணையர் தெளிவாக EF லையனில் கிழமேல் 16 அடியை பிரதிவாதிகளால் ஆக்கிரமித்து கட்டப்பட்ட பகுதி என்று தனது அறிக்கையில் மிக தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றும், நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் ABCD என்ற பகுதி வாதியின் வீடு என்றும், EFIJ என்பது பிரதிவாதிகள் கட்டிடம் என்றும் தெளிவுபடுத்தியுள்ளார் என்றும், மனுதாரர்கள் தாவா மனுவை தாக்கல் செய்வதில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறியிருப்பதை வன்மையாக ஆட்சேபிப்பதாகவும், ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தை நீதிமன்ற சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளநிலையில், அதனை சட்டப்படி நீக்கறவு செய்ய இயலாது என்றும், எனவே முந்தைய நீதிமன்ற ஆணையருக்கான கட்டளையை Re–Issue செய்தவதற்கு எந்தவொரு முகாந்திரமும் இல்லை என்றும், அவ்வாறு மீண்டும் புதிய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் கருதும்பட்சத்தில் மூத்த வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து தங்கள் தரப்பு ஆவணங்களையும் வருவாய்துறை ஆவணங்களையும் வைத்து அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், IA.No.3/20 என்ற மனுவில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை பொறுத்து Struck Off செய்ய வேண்டியது அவசியமானதாக இல்லை என்றும், எனவே தாவா மனு தள்ளுபடிக்குரியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

**4.1.** மனுவில் மனுதாரர் முந்தைய மனு IA.No.3/20 ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் வழக்கில் உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் இல்லை என்றும் தாவா சொத்து எது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றும் மனுதாரர்கள் கட்டியுள்ள கட்டிடத்தின் அடி அளவுகளை நீதிமன்ற ஆணையர் அளந்து தனது அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும் எதிர்மனுதாரர் கிரைய பத்திரத்தின் படி மட்டுமே அளவீடு செய்ததாகவும் கூறியுள்ளார்.

**4.2.** அதேசமயம் எதிர்மனுதாரர் தரப்பில் புதிய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் கருதும்பட்சத்தில் மூத்த வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து தங்கள் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களையும், வருவாய்துறை ஆவணங்களையும் வைத்து அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடலாம் என்ற எதிர்மனுதாரர் தரப்பு மனுவின் சாராம்சத்தினை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**4.3.** எனவே மூத்த வழக்கறிஞர் திரு.M.முத்துக்குமார், Bsc.BL., அவர்களை இம்மனுவின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து, அவர் தேவைப்பட்டால் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் தாவா சொத்தை பார்வையிட்டு தற்பொழுது பூமியில் உள்ள உபயதரப்பு கட்டிடங்களின் அமைப்பினை இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

மேலும் மனுதாரர் மூத்த வழக்கறிஞர் ஆணையாளர் கட்டணமாக ரூ.10,000/—ஐ இம்மனு உத்தரவு தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் வழக்கறிஞர் ஆணையர் வசம் வழங்கி அதற்குரிய ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் படி உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக மூத்த வழக்கறிஞர் திரு.M.முத்துக்குமார், Bsc.BL., அவர்களை இந்த வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து மனுச்சொத்தை பார்வையிட்டு அளந்து 10.02.2026-ம் தேதிக்குள் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு இம்மனு செலவுதொகையின்றி அனுமதிக்கப்படுகிறது. அழைக்க:-10.02.2026.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஜனவரி மாதம் 19ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.01.19 17:29:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.01.19 17:29:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

**ORDER**

**I.A.No. 10/2025**
**in**
**OS. No.53/2020**

**Dated: 19.01.2026**